


காலிங்கராயன் தினத்தை முன்னிட்டு அவரது வாரிசுதாரர்கள் ஊஞ்சலூர் பனப்பாளையம் பாசன வாய்க்காலில் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

## காலிங்கராயன் தின விழா

# ஊஞ்சலூர் அருகே காலிங்கராயன் வாய்க்காலில் பாலாபிஷேகம் செய்து விவசாயிகள் வழிபாடு

சிவகிரி,ஜன.19-

ஆண்டுதோறும் தை 5ம் தேதி காலிங்கராயன் தினவிழா பாசனப்பகுதி விவசாயிகளால் கொண்டாடப்பட்டு வருகிறது. நேற்று காலிங்கராயன் பாசனப்பகுதிகளான பஞ்சலிங்கபுரம், கருப்பகவுண்டம்பாளையம், ஆட்டுக்காரன்புதூர் உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் காலிங்கராயன் சிலை வைத்து வழிபட்டனர். மேலும் ஊஞ்சலூர் பனப்பாளையத்தில் நடைபெற்ற விழாவில் அப்பகுதியை சேர்ந்த பாசன விவசாயிகள் காலிங்கராயன் வாய்க்காலில், விபூதி, சந்தனம், மற்றும் பசும்பாலைக்கொட்டி அபிஷேகம் செய்தனர். இதனை தொடர்ந்து முளைப்பாரி கரைத்து, மலர்கள் தூவி, தீபாராதனைகாட்டி வழிபாடு செய்தனர். காலிங்கராயன் நினைவாக பொங்கல் வைத்து அவரது சிலை முன்பு படையலிட்டு சாமி கும்பிட்டனர்.

நிகழ்ச்சிக்கு கிராமக்குழுவை சேர்ந்த வக்கீல் சுப்பிரமணியம் தலைமை தாங்கினார். பாசனசபை தலைவர் வேலாயுதம், காலிங்கராயன் பாரம்பரிய வாரிசுதாரர்கள் சித்தார்த் காலிங்கராயன், அருண்காலிங்கராயன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமிழக மஞ்சள் விவசாயிகள் சங்க மாநில அமைப்பாளர் துரைதியாகராஜன் வரவேற்றார். சரஸ்வதி எம்.எல்.ஏ. காலிங்கராயன் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். ஊஞ்சலூர், கருக்கம்பாளையம், தாமரைப்பாளையம், வெங்கம்பூர் பகுதிகளை சேர்ந்த காலிங்கராயன் பாசனவிவசாயிகள் கலந்து கொண்டனர்.